Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 15 2023

புதன்கிழமை நவம்பர் 15, 2023 | ஒளி: 09 கதிர் 128 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## டிக்டொக் செயலிக்கு நேபாளம் தடை




சீனாவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும், 'பைட் டான்ஸ்' என்ற நிறுவனம், டிக்டொக் என்ற சமூக வலைத்தள செயலியை உருவாக்கியது. இந்த செயலி உலகம் முழுவதும் செயல்பட்டு வந்தது.

இந்த செயலி நாட்டின் பாதுகாப்புக்கும், தனிப்பட்ட நபர்களின் தரவுகளுக்கும் உரிய பாதுகாப்பின்மை இருப்பதாகக் கூறி இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா உட்பட பல்வேறு நாடுகள் தடை விதித்துள்ளன.

தொடர்ச்சி P2

## "மாடுகளின் வாய்க்குள் வெங்காய வெடி வைத்து வாய் சிதறடிப்பு"



புத்த பெருமான் போதித்த காருண்யம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு - மாதவனை பகுதிகளில் மீறப்படுகின்றது என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீதரன் வாய் பேச முடியாத மாடுகளுக்கு வாய்க்குள் வெங்காய வெடியை வைத்து வாயைச் சிதறடிக்கின்றீர்கள். இதனால் அந்த மாடுகள் உணவுகூட அருந்த முடியாமல் அணு அணுவாக செத்துப்போகின்றது என்றார்.

காலை இழந்த ஒரு இராணுவ வீரர் தான் இவ்வாறான கொடூரத்தைச் செய்கின்றார். மயிலத்தமடு- மாதவனையில் பெரும் பாவத்தினை இந்த நாடு செய்து கொண்டிருக்கின்றது என்று தெரிவித்த அவர், இலங்கையில் சமாதானத்தின் கதவுகள் இறுக மூடப்பட்டுள்ளன. நல்லிணக்கத்தின் கதவுகளுக்கு "சீல்" வைக்கப்பட்டுள்ளது. பௌத்தத்தைப் பின்பற்றுகின்ற, புத்தரின் பெயரால் விகாரைகளை அமைக்கின்ற, அவரின் பெயரினால் இந்த நாட்டில் அநியாயங்களுக்கு எல்லாம் முடி சூட்டுகின்ற பிக்குமாரைக் கொண்டுள்ள இந்த நாட்டில் கருணையும் அஹிம்சையும் யாரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. புத்த பெருமான் சொன்ன பாவங்களை நீங்கள் எங்கே கழுவப்போகின்றீர்கள், எங்கே கரைக்கபோகின்றீர்கள்? என்றும் கேள்வியெழுப்பினார்.

தொடர்ச்சி P2



## ஐ.நாவிடம் மகஜர்

காசாவில் உடனடியாக யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தலையிடுமாறு கோரி, இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட மகஜரொன்று, கொழும்பில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் செவ்வாய்க்கிழமை (14) கையளிக்கப்பட்டது. இந்த மகஜரை கையளிக்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், ரவூப் ஹக்கீம், வீரசுமன வீரசிங்ஹ, பௌசி, ஹலீம், இஷாக் ரஹ்மான், ஹரீஸ், தௌபீக் மற்றும் மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

## பொருளாதார நெருக்கடிக்கு

# மூவரும் பொறுப்பு

## ஐவரடங்கிய நீதியசர்கள் குழாம் அதிரடி தீர்ப்பு



நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரே பொறுப்பு கூறவேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது,

உயர்நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்கள் அடங்கிய குழாம் முன்னிலையில், வழக்கு, செவ்வாய்க்கிழமை (14) தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, உயர்நீதிமன்றம் மேற்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது,

அத்துடன், மனுதாரரின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்றும் உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில், வழக்கை தாக்கல் செய்த மனுதாரருக்கு வழக்கு பணமாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை வழங்குமாறும் கட்டளையிட்டுள்ளது.

## "நிதி வேண்டாம்: நீதியே தேவை"

■ சண்முகம் தவசீலன்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விடயத்துக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடும் கண்டணம் வெளியிட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## 1,326 கிலோ மீற்றர் தொலைவில் நிலநடுக்கம்

இலங்கையை அண்மித்து தென்கிழக்கு கடல் பிரதேசத்தில் 6.2 ரிக்டர் அளவில் பாரிய நிலநடுக்கம் ஒன்று பதிவாகியுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## கால்வாய் நிரம்பியதால் கற்பித்தலுக்கு இடையூறு



■ ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா வலயக் கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் ஹட்டன்- கொட்டகலை கிறிஸ்லஸ் ஃபார்ம் தமிழ் பாடசாலையின் கற்பித்தல் நடவடிக்கைகள் செவ்வாய்க்கிழமை (14) முற்றாக நிறுத்தப்பட்டதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## 4/21 தாக்குதல் இழப்பீடு: 3 கோடி ரூபாய் வைப்பீடு

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் இழப்பீட்டு தொகையை வைப்பிலிடுமாறு உயர் நீதிமன்றத்தின் உத்தரவிட்டிருந்தது.

தொடர்ச்சி P2



## மலை உச்சியில் பாரிய விரிசல் 12 குடும்பங்கள் வெளியேற்றம்

இரத்தினபுரி மாவட்டத்தில் கடிகல்ல மலையில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதால், புட்கந்த டொமைன் மற்றும் கொலொன்ன கொண்டுகல பிரதேசத்தை அண்மித்த இரண்டு பிரதேசங்களில் உள்ள பன்னிரண்டு வீடுகளில் வசிப்பவர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டதாக கொலொன் பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## யாழில் மழையால் 8 குடும்பங்கள் பாதிப்பு

■ கஜிந்தன்

தொடர்ச்சியாக பெய்துவரும் மழையினால் இதுவரை யாழ்ப்பாணத்தில் 8 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என யாழ்ப்பாண அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/388 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, அதே பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெய்த மழையினால் 7 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## காலில் காயமடைந்த கடல் கழுகு மீட்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

காயமடைந்த கடல் கழுகு ஒன்று ஹட்டன், காசல்ரீ நீர்த்தேக்கத்தில் உள்ள தீவு ஒன்றில் மீட்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## சபையில் கூறப்பட்ட வடிவேல் நகைச்சுவை

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால், பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (13) முன்வைத்த வரவு- செலவுத் திட்டத்தை, இந்திய நகைச்சுவை நடிகர் வடிவேலுடன் ஒப்பிட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் பேசினார்.

தொடர்ச்சி P2

## விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் நிகழ்நிலை முறைமை ஆரம்பம்



உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இணையவழி (Online) (நிகழ்நிலை) முறைமையின் மூலம் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் முறை வடமாகாணத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது,

முதற்கட்டமாக வடமாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி நிறுவனங்களில் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், விரைவில் நாடளாவிய ரீதியில் உள்ள ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

உலக நகரத் திட்டமிடல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம், வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (13) நடைபெற்ற வைபவத்தில் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.


தொடர்ச்சி P2

## மலசலக் கூடத்தில் இருந்து சடலம் மீட்பு

■ நவி

கம்பளை கல்வி வலய திணைக்களத்தில் அலுவலக உதவியாளராக கடமையாற்றிய சந்திமால் குருகே (வயது 44) மலசலக்கூடத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டதாக கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், கம்பளை ரத்மல்கடுவ பிரதேசத்தில் வசித்து வந்தவர், திங்கட்கிழமை (13) திணைக்களத்துக்கு வந்துள்ளார்.




தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “மாடுகளின் வாய்க்குள் வெங்காய வெடி வைத்து வாய் சிதறடிப்பு”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்ற வரவு -செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதல் நாள் குழ்நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மீண்டும் இந்த நாட்டில் துன்பங்கள் துயரங்கள் நடைபெறாது அல்லது இந்த நாட்டில் மீண்டும் தமிழ் மக்கள் வஞ்சிக்கப்படமாட்டார்கள், அவர்கள் மீது நடந்த இனப்படுகொலை மீண்டும் நடைபெறமாட்டாது, அவர்கள் மீது நடந்த போர்க்குற்றங்கள் இனியும் நடக்காது என்று சொல்வதற்கான, மீள நிகழாமை தொடர்பான எந்த உத்தரவாதங்களும் இந்த நாட்டில் இல்லை எனவும் கூறினார்.

இங்கு நல்லிணக்கத்துக்காகச் சொல்லப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்ட வார்த்தை “வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வழங்க அரசு பலகோடி ரூபா ஒதுக்கீடு” என்பதாகும் இறந்துபோன உயிர்களுக்கு, காணாமல் போனவர்களுக்கு நீங்கள் காசால் விலை பேசுகின்றீர்களே தவிர அவர்களுக்கு என்ன நடந்தது, இறுதி யுத்தத்தில் சரணடைந்தவர்கள் ஒப்படைக்கப்பட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை கண்டுபிடிக்க அல்லது மீண்டும் அது நிகழாமலிருக்க இந்த நாட்டின் தலைவர்கள், நியாயமுள்ள மனிதர்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? என்றும் கேள்வியெழுப்பினார்.

# டிக்டாக் செயலிக்கு நேபாளம் தடை




சமீபகாலமாக இந்தச் செயலியின் மூலமாக பல்வேறு மதத்தினர் இடையே வெறுப்புணர்வு தூண்டும் வகையில் காணொளிகள் பதிவிட்டு வருவதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதனால் சமூக நல்லிணக்கத்திற்குக் கேடு விளைவிக்கும் செயல்கள் அதிகரித்துள்ளதாக, நேபாள அரசு கண்டறிந்துள்ளது.

இதை அடுத்து, பிரதமர் புஷ்ப கமல் பிரசண்டா தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில், டிக்டாக் செயலிக்குத் தடை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்நாட்டுத் தகவல் ஒலிபரப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் ரேகா சர்மா கூறுகையில், ”டிக்டாக் செயலிக்குத் தடை விதிக்க அனைத்து பணிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. எனினும், அதற்கான காலக்கெடு எதுவும் வரையறுக்கப்படவில்லை,” என்று கூறினார்.

# “நிதி வேண்டாம்: நீதியே தேவை”

சர்வதேச விசாரணையே எமக்குத் தேவை எனவும் நிதி கோரி நாம் போராடவில்லை எனவும் நிதி எமக்குத் தேவையில்லை எனவும் நீதியே வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி முல்லைத்தீவு ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (14) மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்களுடைய உறவுகளைத் தேடி சுமார் 14 ஆண்டுகளுக்கு மேலாகத் தாம் தொடர்ச்சியாகப் போராடி வருவதாகவும் இலங்கை அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லை எனவும் சர்வதேச விசாரணை ஒன்றே தேவை எனவும் கூறியே தாங்கள் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுத்து வருவதாகவும் சர்வதேச சமூகத்தின் பார்வையில் எங்களுடைய போராட்டம் பேசு பொருளாக மாறி உள்ள நிலையில், சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் விதமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றார்.

இந்த இழப்பீட்டுக்கான நிதி ஒதுக்கியதன் ஊடாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இருக்கிறார்கள் என்ற விடயத்தை ஒத்துக் கொண்டமை நல்ல விடயம் எனவும் எமக்குச் சர்வதேச நீதிப் பொறிமுறை ஊடாக எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதற்கான நீதியே தேவை எனவும் நிதி தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

# 1,326 கிலோ மீற்றர் தொலைவில் நிலநடுக்கம்

இலங்கையின் தென் பகுதியில், கொழும்பிலிருந்து சுமார் 1,326 கிலோ மீட்டர் தொலைவில் செவ்வாய்க்கிழமை (14) பிற்பகல் 12:31 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்திய பெருங்கடலில் 10 கிலோ மீட்டர் ஆழத்திலேயே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன், நிலநடுக்கத்தினால் இலங்கைக்கு எந்தவித பாதிப்பும் கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை எனவும் புவிசரிதவியல் மற்றும் சுரங்க பணியகம் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக, இந்தியாவின் வட மாநிலங்களில் கடந்த சில மாதங்களாகவே தொடர்ந்து நில அதிர்வு ஏற்பட்டு வருகிறது. அதே போன்று பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஆப்கானிஸ்தானில் கடந்த மாதம் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக சுமார் 2000க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

# கால்வாய் நிரம்பியதால் கற்பித்தலுக்கு இடையூறு



டெவோ நீர்வீழ்ச்சிக்கு நீரைக் கொண்டுச்செல்லும் கிளை கால்வாய்களில் ஒன்றான கிறிஸ்லஸ் ஃபார்ம் கால்வாய் கடந்த 10 ஆம் திகதி பிற்பகல் நிரம்பி வழிந்ததுடன் பாடசாலைக்குள் சுமார் 03 அடிக்கு மேல் நீர் நிரம்பியது.

கட்டிடங்களில் வண்டல் மண் படிந்துள்ளதுடன், பிரதேச கல்விப் பணிப்பாளரின் பணிப்புரைக்கமைய பாடசாலை மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர் பணியாளர்கள் இணைந்து பாடசாலையை செவ்வாய்க்கிழமை (14) துப்புரவு செய்தனர். இதனால், பாடசாலையின் கற்பித்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதாக அதிபர் தெரிவித்தார்.

இதனால் தங்கள் பள்ளி அருகே உள்ள கால்வாயை அகலப்படுத்த வேண்டுமென, அப்பாடசாலையில் கல்விப்பயிலும் மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 4/21 தாக்குதல் இழப்பீடு: 3 கோடி ரூபாய் வைப்பீடு

அந்த உத்தரவுக்கு அமைய இழப்பீட்டு தொகையாக 32 கோடி ரூபாய் செலுத்த வேண்டும்.

மைத்திரிபால சிறிசேன, பூஜித் ஜயசுந்தர, நிலந்த ஜயவர்தன, ஹேமசிறி பெர்னாண்டோ, சிசிர மெண்டிஸ் ஆகியோரும் அரசாங்கமும் இழப்பீட்டு தொகையாக செலுத்த வேண்டும்.

எனினும், இழப்பீட்டு அலுவலக வைப்பு கணக்கில் 3 கோடியே 68 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை இதுவரை வைப்பிட்டுள்ளனர் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

முழுமையான நிதி வைப்பிலிடப்பட்டதும் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்றார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான காவிந்த ஜயவர்தன, உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஒரு தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்தார்கள். இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களுக்கு அமைய உயர்நீதிமன்றம் கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதி தீர்ப்பளித்தது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 10 கோடி ரூபாய், முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர 7.5 கோடி ரூபாய், அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் பிரதானி நிலந்த ஜயவர்தன 7.5 கோடி ரூபாய், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் 5 கோடி ரூபாய், தேசிய புலனாய்வு பிரிவின் முன்னாள் பிரதானி சிசிர மெண்டிஸ் 1 கோடி ரூபாய் மற்றும் அரசாங்கம் 1 கோடி ரூபாய் செலுத்த வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிதியை நீதியமைச்சின் விடயதானத்தின் கீழ் உள்ள இழப்பீட்டுக்கான காரியாலய வைப்பில் இடுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

இதற்கமைய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 15 மில்லியன் ரூபாய், நிலந்த ஜயவர்தன 4.1 மில்லியன் ரூபாய், பூஜித ஜயசுந்தர 1.7 மில்லியன் ரூபாய், ஹேமசிறி பெர்னாண்டோ 5 மில்லியன் ரூபாய், சிசிர மெண்டிஸ் 10 மில்லியன் ரூபாய், அரசாங்கம் 1 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் இழப்பீட்டு அலுவலகத்துக்கு 3 கோடியே 68 இலட்சம் 25 ஆயிரம் ரூபாய் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்த நிதி தொடர்பான விபரம் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மு முமையாக நிதி தொகை வைப்பிலிடப்பட்டதும் நீதிமன்றத்தின் கண்காணிப்புடன் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்றார்.

# சபையில் கூறப்பட்ட வடிவேல் நகைச்சுவை

வரவு-செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான, விவாதம் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஸ்ரீதரன், நகைச்சுவை நடிகர் வடிவேல், ஒரு நகைச்சுவை காட்சியில் “வரும் ஆனால் வராது” என்ற வசனம் பயன்படுத்தப்பட்டது. அதுபோலதான், இந்த பட்ஜெட்டில், அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 10,000 ரூபாவால் அதிகரிப்பு என இன்றைய (14) (நேற்றைய) பத்திரிகைகளில் அறிக்கையிடப்பட்டுள்ளன.

எனினும், எப்போது கிடைக்கும் என்று சரியாகக் கூறவில்லை. அதுதான் “வரும் ஆனால் வராது” என்று குறிப்பிட்டார். ஏப்ரல் முதல் கிடைக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த இடைப்பட்ட காலத்துக்குள் எதுவும் நடக்கலாம். பாராளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்கள் கூட நடக்கலாம்.

எனவே, இவ்வாறான ஏமாற்று நடவடிக்கைகள் அரசாங்கத்திடம் இருக்கும் வரைக்கும் அரசாங்கத்தால் சரியானதொரு பாதையை தெரிவு செய்ய முடியாது. அரச ஊழியர்களையும் சரியான பாதைக்கு கொண்டு செல்ல முடியாது என்றார்.




# மலை உச்சியில் பாரிய விரிசல் 12 குடும்பங்கள் வெளியேற்றம்

அண்மைய நாட்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக கடிகல்ல மலை உச்சியில் பாரிய விரிசல்கள் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். சுமார் இருபது ஏக்கர் நிலப்பரப்பு மூழ்கி, விரிசல் வழியாகச் சேறும் சகதியுமாக ஓடுவதாகவும் கூறுகின்றனர்.

கொலொன்னையில் இருந்து நெடோல ஊடாக புட்கந்த வரையிலான கார்பெட் வீதியானது மண்சரிவு அபாயம் உள்ள பகுதியினூடாக இடிந்து விழுந்துள்ளதாக பிரதேச வாசிகள் மேலும் தெரிவிக்கின்றனர். எம்பிலிப்பிட்டியவில் இருந்து கொலொன்னஇ நெடோலஇ புட்கந்த ஆகிய பகுதிகளுக்கு நாளொன்றுக்கு நான்கு தடவைகள் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து இயங்குவதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த அபாயம் கொலன்னா மற்றும் புட்கந்த கிராம உத்தியோகத்தர் களங்களில் உள்ள வீடுகளைப் பாதித்துள்ளது. வெளியேற்றப்பட்ட குடும்பத்தினர் தற்காலிகமாக உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். தற்போது, இரண்டாயிரம் ரூபாய் மதிப்பிலான உலர் உணவுகள் அடங்கிய பொதி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

# யாழில் மழையால் 8 குடும்பங்கள் பாதிப்பு

அந்தவகையில், இதுவரை கிடைத்த தரவுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் மொத்தமாக 8 குடும்பங்களைச் சேர்ந்த 31பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 43.1 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன், 2023ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 897.7 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகி உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# காலில் காயமடைந்த கடல் கழுகு மீட்பு

மீட்கப்பட்ட கடல் கழுகு வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. காசல்ரீ நீர்த்தேக்கத்தில் உள்ள சுற்றுலா ஹோட்டல் ஊழியர் ஒருவரே அந்த கடல் கழுகைப் பிடித்து, செவ்வாய்க்கிழமை (14) ஒப்படைத்துள்ளார்.

காசல்ரீ நீர்த்தேக்கத்தைச் சுற்றி வாழும் கடல் கழுகுகள் மீது காகங்கள் தாக்கியதால், கடல் கழுகு காலில் ஏற்பட்ட காயம் காரணமாகப் பறக்க முடியாமல், காசல்ரீ நீர்த்தேக்கத்தில் உள்ள தீவில் படுத்திருந்துள்ளது.

அதனையடுத்து ஹோட்டல் ஊழியர் திங்கட்கிழமை (13) மதியம் படகில் கடல் கழுகை மீட்டு காயங்களுக்குள்ளான கடல் கழுகை ஹட்டன் பொலிஸாரின் ஊடாக வனவிலங்கு



அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

நுவரெலியா வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் ஹட்டன் பொலிஸாருக்கு வந்து காயமடைந்த கடல் கழுகை ஹட்டன் பொலிஸாரிடமிருந்து பொறுப்பேற்று, ரந்தெனிகல கால்நடை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

# விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் நிகழ்நிலை முறைமை ஆரம்பம்

கட்டிட அபிவிருத்தி அனுமதிகளுக்குத் தேவையான அனைத்து அனுமதிகளையும் விரைவாகப் பெறுவதற்கு இந்த அமைப்பு உதவுகிறது. உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு இந்த (Online) தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் முதன்மை நோக்கம், கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்களை அங்கீகரிக்க எடுக்கும் நேரத்தைக் குறைத்து, எளிமைப்படுத்துவதன் மூலம் அதிக சேவையை வழங்குவதாகும்.

9000 சதுர அடிக்கு மேல் கட்டிடங்கள் கட்டுவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அனுமதி வழங்கப்படுகிறது. 9000 சதுர அடிக்குக் குறைவாக இருந்தால், சம்மந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களினால் ஒப்புதல் அளிக்கப்படும்.

நகர அபிவிருத்தி அதிகாரசபை தற்போது இணையவழி (Online) முறை மூலம் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்களை அனுமதிக்கும் முறைக்கு ஏற்கனவே ஒப்புதல் அளிக்க ஆரம்பித்துள்ளது. இது 2017 இல் தொடங்கப்பட்டது.

குறிப்பாக இணையவழி (Online) மூலம் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்களுக்கு அனுமதி அளிப்பதன் மூலம், அதை கண்காணிக்க உயர் அதிகாரிகளுக்கு அனுமதி வழங்க முடியும். வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதன் மூலம் மோசடி மற்றும் ஊழலை குறைக்க முடியும் என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

உலக நகர திட்டமிடல் தினத்தை முன்னிட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண அலுவலகத்தினால் புகைப்படப்போட்டியும் துவிச்சக்கரவண்டி சவாரியும் நடாத்தப்பட்டதுடன் வெற்றி பெற்றவர்களுக்கும் பங்குபற்றிய பாடசாலை மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# மலசலக் கூடத்தில் இருந்து சடலம் மீட்பு




எனினும், காலை 10 மணியளவில் அவரை காணவில்லை.

அவருடைய கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பு விடுத்தும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இதனையடுத்து, கம்பளை வலயக் கல்விப் பணிப்பாளர் நிஹால் அழககோனின் ஆலோசனையின் பிரகாரம் அவரை தேடியுள்ளனர்.

அலுவலகத்துக்குள் இருந்த மலசலகூடத்தில் கதவைத் திறந்து பார்த்தபோது, கீழே விழுந்து கிடந்துள்ளார். எனினும், அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டார் என கண்டறியப்பட்டது.

# யாழ். வந்த விமானம் சென்னைக்கே திரும்பியது

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் வந்த விமானம், மோசமான காலநிலை காரணமாக தரையிறங்க முடியாமல் மீண்டும் சென்னைக்குத் திரும்பியுள்ளது.

சென்னை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து யாழ். சர்வதேச விமான நிலையம் நோக்கி திங்கட்கிழமை (13) புறப்பட்ட பயணிகள் விமானம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக தரையிறங்க முடியாமல் சென்னை சர்வதேச விமான நிலையத்தில் மீண்டும் தரையிறக்கப்பட்டுள்ளது.

இந்த விமானம் செவ்வாய்க்கிழமை (14) காலை மீண்டும் யாழ்ப்பாணம் வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், விமானத்தில் 24 பயணிகள் பயணிப்பதற்கான மாற்றுப் பயணச்சீட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பயணிகள் அனைவரும் சென்னையில் உள்ள ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# யாழில் சிறப்புரை

இந்தியாவின் பிரபல நகைச்சுவை பேச்சாளர் மோகனசுந்தரத்தின் சிறப்புரை எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

“நல்லதோர் குடும்பம்" என்ற தலைப்பின் கீழ் இந்த சிறப்புரை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வினை யாழ்ப்பாணம் - இந்திய துணைத்தூதரகம் ஏற்பாடு செய்துள்ளதுடன், இது முற்றிலும் இலவசமான ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது. அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# “ஊடகவியலாளர்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும்”

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்

ஊடகவியலாளர்கள் சமூகத்தில் கௌரவமான பொறுப்பைச் சுமந்தவர்கள். அவர்கள் தமது பொறுப்பையும் கடமையையும் சமூகத்தின் எதிர்காலம் நோக்கியதாக முன்னெடுக்க வேண்டும் என இலங்கை இராணுவத்தின் ஊடகத்துறை ஆலோசகர் டி.பி.சிசிர குமார விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவம் மற்றும் ஊடகவியலாளர்களுக்கிடையில் நல்லிணக்க புரிந்துணர்வை ஏற்படுத்தும் முகமாக இலங்கை இராணுவத்தின் 24ஆவது படைப்பிரிவு மற்றும் இளைஞர் தன்னார்வக் குழு என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த அம்பாறை மாவட்டத்தின் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலமான ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் ஒரு நாள் செயலமர்வு 24ஆவது இராணுவ படை பிரிவின் அம்பாறை - மல்வத்தை தலைமை அலுவலகத்தில் சனிக்கிழமை (11) நடைபெற்றுள்ளது.

இந்த செயலமர்வில் இலங்கை இராணுவத்தின் ஊடக ஆலோசகர் டி.பி. சிசிர குமார விஜயசிங்க கலந்து கொண்டு விளக்கமளிக்கும்போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து இங்கு விளக்கமளிக்கையில்,

இராணுவத்தினருக்கு இந்த நாட்டை பாதுகாப்பதற்கும் அவர்களுடைய கடமையைச் செய்வதற்கு எவ்வாறு பொறுப்புக்கள் இருக்கிறதோ அதேபோன்று ஊடகவியலாளர்களுக்கு




இந்த நாட்டை பாதுகாப்பதற்கும் அவர்களுடைய கடமையை செய்வதற்கும் பொறுப்புகள் இருக்கின்றன. ஆனால், இன்று சில ஊடக நிறுவனங்களும் ஊடகவியலாளர்களும் அரசியல் சார்ந்தவர்களால் வாங்கப்படுகின்ற துர்ப்பாக்கியமான நிலை எமது நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

சிலர் மக்களைத் திசை திருப்பும் வகையில், பிழையான அல்லது பொய்யான தகவல்களை சமூக வலைத்தளங்களில் வெளியிடுகிறார்கள். இறுதி யுத்தத்தின் போது சிலர் வெவ்வேறு நாடுகளில் இருந்து ஊடகவியலாளர்கள் என்று கூறிக்கொண்டு ஊடக நிறுவனங்களின் அடையாள அட்டையுடன் வந்து, யுத்தம் நடைபெறுகின்ற பகுதிகளுக்குள் சென்று பயங்கரவாதிகளுக்கு தகவல்கள் கொடுப்பவர்களாக செயல்பட்டதன் காரணமாக, நாம் தகவல் திணைக்களத்தில் பதிவு செய்தவர்களுக்கு அனுமதியை வழங்கி இருந்தோம்.

நாட்டை பாதுகாக்கும் பொறுப்பு இராணுவத்தினருக்குண்டு. இராணுவத்தினருடன் இணைந்து நாட்டை பாதுகாக்கின்ற பொறுப்பில் ஊடகவியலாளர்கள் பணியாற்ற வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மேலும், கிழக்கில் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து கேட்டறிந்து கொண்டதுடன், கலந்து கொண்டவர்களுக்கு இராணுவத்தினரால் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த செயலமர்வில் இளைஞர் தன்னார்வ குழு ஸ்தாபகர் நாசிறூன் சுலைமான், இராணுவ ஊடக பிரிவில் கடமையாற்றும் அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டுள்ளனர்.



# மாமரத்தை வீழ்த்திய மாமத யானை

■ வி.ரி.சகாதேவராஜா

காட்டு யானை ஒன்று பாரிய மாமரம் ஒன்றை அடியோடு முறித்து வீழ்த்தியது சம்பவம் சம்மாந்துறையை அடுத்துள்ள கந்தன்வெளி வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காரைதீவைச் சேர்ந்த இராஜநாயகம் ரமேஷ் என்பவரின் கந்தன்வெளி வயலில் இருந்த பாரிய மாமரமே இவ்வாறு முறித்து வீழ்த்தப்பட்டுள்ளது.

அத்துடன், அவரது விதைக்கப்பட்ட வயலும் யானை திரிந்ததால் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

# ஆலயத்திற்கு மேல் குடைசாய்ந்த அரசமரம்



■ பு.கஜிந்தன்

யாழில் உள்ள ஆலயம் ஒன்றின் மீது மரம் முறிந்து விழுந்ததால் குறித்த ஆலயம் சேதமடைந்துள்ளதாக யாழ். அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கு, சங்கானை - வட்டு மேற்கில் (ஜே/167) பாரிய அரசமரம் ஒன்று தொடர்ந்து பெய்த மழை காரணமாக திங்கட்கிழமை (13) இரவு குடைசாய்ந்து விழுந்துள்ளது.

இப்பிரிவில் உள்ள ஞானவைரவர் ஆலயத்துக்கு அருகில் இருந்த மரமே இவ்வாறு விழுந்துள்ளது.

இதனால் ஆலயத்துக்கு சேதம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# உலக நீரிழிவு தின விழிப்புணர்வு நடை பவனி

■ நூருல் ஹுதா உமர்

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு நிந்தவூர் ஆதார வைத்தியசாலையும், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் ஒழுங்கு செய்திருந்த விழிப்புணர்வு நடைபவனி செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்றுள்ளது.

மேலும், நீரிழிவு நோயின் தாக்கம் அதன் அறிகுறி, அதனால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதைக் கட்டுப்படுத்தும் வகையிலான நடைமுறைகள், நீரிழிவு நோயாளிகளுக்கான சிபாரிசு செய்யப்பட்ட உணவு வகைகள் எவை என்பது தொடர்பில் பிரசுரமொன்றும் இந்த நடைபவனியில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

# நெடுந்தீவில் வெங்காய செயல்முறை பயிற்சி

யாழ். நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பினது நல்வாழ்வு நம்பிக்கை செயற்றிட்டத்தின் கீழ் உண்மை விதை வெங்காய உற்பத்தி தொடர்பான செயல்முறை பயிற்சி நடைபெற்றுள்ளது.

இந்த செயல்முறை பயிற்சி, நெடுந்தீவு பகுதிக்கான விவசாய போதனாசிரியர் சி.கோகுலராமினால், நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பின் விவசாய செயற்திட்டக் காணியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான விதை வெங்காயத்தினை மானியமாக விவசாயத் திணைக்களம் வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன், நெடுந்தீவு ஊரும் உறவின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் மு.அமிர்தமந்திரன், தலைவர் கலின்குமார் மற்றும் விவசாய இணைப்பாளர் தமிழ்மாறன், விவசாய அமைப்புக்களின் தலைவர் மகாராசா, பணியாளர்கள், மூத்த விவசாயிகள் ஆகியோர் எனப் பலர் கலந்து சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழில் பெற்றோல் குண்டு தாக்குதல்



■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் இரு குடும்பத்தினர் இடையில் நீண்டகாலமாக நிலவி வந்த முரண்பாடு காரணமாக வீடொன்றின் மீது திங்கட்கிழமை (13) இரவு பெற்றோல் குண்டு வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒட்டுமடம் பகுதியில் உள்ள வீடொன்றின் மீதே இந்த பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த குண்டுத் தாக்குதலில் வீட்டின் முன் கதவு சேதமடைந்துள்ளதுடன், வீட்டின் வாசலில் இருந்த பாதணிகள் தீயில் எரிந்துள்ளன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்குச் சென்று பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில், தம்முடன் முரண்பட்டுள்ள குடும்பமே இந்த தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்டதாகத் தாக்குதலுக்கு இலக்கான வீட்டார் தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கத்தி குத்துக்கு இலக்காகி ஒருவர் மரணம்

■ ஆ.ரமேஸ், சுஜிதா, கௌசல்யா, பி.கேதீஸ்



தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலிரூட் தொழிற்சாலை பகுதிக்கு அருகில் திங்கட்கிழமை (13) மாலை இடம்பெற்றுள்ள கோஷ்டி மோதலில் கத்தி குத்துக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கிறேட் வெஸ்டன் பகுதியை சேர்ந்த 28 வயதுடைய சிவஞானம் பிரதீபன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபருடன் நீண்டநாள் பகை கொண்டிருந்தவர் என சந்தேகிக்கப்படும் ஒருவரால் ஏற்பட்ட குழு மோதலில் இந்த கத்தி குத்து சம்பவம் நடந்தேறியுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ள தலவாக்கலை பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

# கற்கைநெறி உத்தியோகத்தர்கள் களவிஜயம்

■ யது பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் உற்பத்தித்திறன் சார் செயற்பாடுகளை பார்வையிட வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் கற்கை நெறி பயிலும் அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் செவ்வாய்க்கிழமை (14) விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் (MDTU) பத்து நாட்களைக் கொண்ட கற்கை நெறியினை கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கற்றுவருகின்றனர்.



குறித்த பயிற்சித் திட்டத்தின் ஒரு பகுதியான உற்பத்தித்திறன் கற்கையின் கள அனுபவங்களை செயன்முறையாக பெற்றுக்கொள்ளும் முகமாகவே குறித்த விஜயம் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# குளியலறைக்குள் நுழைந்த பெண் கான்ஸ்டபில் பணிநீக்கம்

தனியொருவர் வாழும் வீட்டின் குளியலறைக்குள் நுழைந்த பெண் கான்ஸ்டபிள் ஒருவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கிரிபத்கொட பொலிஸில் பணியாற்றும் பெண் கான்ஸ்டபிள், அந்த பொலிஸ் நிலையத்தில் இணைந்ததாக கடமையாற்றும் கான்ஸ்டபிளை குளியலறைக்குள் அழைத்துச் சென்று சட்டவிரோதமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

பெண் கான்ஸ்டபிளும் மற்றுமொரு கான்ஸ்டபிள்ளும் குளியலறைக்குள் இருப்பதை மற்றுமொரு பெண் கான்ஸ்டபிள் கண்டு, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.




இந்த சம்பவம் தொடர்பில் களனி பொலிஸ் அதிகாரி (01) ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, திங்கட்கிழமை (01) பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கிரிபத்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# காலம் கடந்த ஞானம் கைவிடப்படவே வேண்டும்

ஒரு நாட்டின் அரசாங்கத்தைச் சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான முழுப்பொறுப்பும் எதிர்க்கட்சியையே சாரும். எதிர்க்கட்சிகளின் விமர்சனங்கள், யோசனைகளை ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் கவனத்தில் எடுக்கவேண்டும். இல்லையேல், ஆட்சி கவிழ்வதற்கான சந்தர்ப்பங்களே அதிகமாகும்.

சீனாவில் கொரோனா தொற்று பரவிய காலத்தில், பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கொரோனா தொற்று நாட்டுக்குள் பரவுவதற்கு முன்னரே, விமான நிலையங்களை மூடுமாறு, அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

அவரது ஆலோசனையை அன்று ஆட்சியிலிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அன்றைய அரசாங்கம் செவிசாய்க்காமையால், பல வழிகளிலும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இறுதியில் அதிலிருந்து மீண்டெழ முடியாத நிலைமையே அவ்வரசாங்கத்துக்கு ஏற்பட்டது. மக்கள் போராட்டங்களும் வெடித்தன. ஜனாதிபதி பதவியையும் இழக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

பொருளாதார ரீதியில் பாரியளவில் நெருக்கடிக்கு முகங்கொடுத்தது. ஏற்றுமதி வருமானம் இழக்கப்பட்டு, இறக்குமதிக்கு அந்நிய செலாவணி இல்லாத நிலைமை ஏற்பட்டு, வங்குரோத்து நிலைக்குச் சென்றது. நாட்டை இரண்டொரு வாரங்களுக்கு இழுத்து மூடியிருந்திருந்தால், கொவிட் தொற்று ஏற்பட்டிருக்காது. பல மாதங்களுக்கு நாட்டை மூடி வைத்திருக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்காது.

எனினும், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட இன்னும் சிலரே பொறுப்புக்கூற வேண்டும் என்று, ஐந்து நீதியரசர்கள் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம், செவ்வாய்க்கிழமை (14) தீர்ப்பளித்துள்ளது.

பொருளாதார படுகுழிக்குள் விழுந்து கிடந்த நாட்டை கொஞ்சம், கொஞ்சமாக மீட்டெடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்தவேண்டும். எனினும், மக்களைக் கடுமையாகப் பாதிப்படையச் செய்யும் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அனுமதியளிக்கக்கூடாது. இது எதிர்க்கட்சிகளின் கைகளிலேயே உள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு, இரண்டாவது வாசிப்பு மீதான முதல்நாள் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. எனினும், 2023ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் முன்மொழிவுகளில் எத்தனை நிறைவேற்றப்பட்டுள்ளன. எத்தனை நிறைவேற்றப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டவர்கள் கேள்வியெழுப்பினர்.

உண்மையில், பட்ஜெட் முன்மொழிவுகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் அவ்வப்போது கேள்விகளை எழுப்பியிருந்தால், அது மக்களின் ஞாபகத்தைத் தூண்டியிருக்கும், அரசாங்கமும் பதிலளிக்க முடியாது திணறியிருக்கும். தற்போது கேட்பதனால் என்ன? பிரயோசனம் என பலரும் வினவுகின்றன. இவ்வாறான காலம் கடந்த ஞானத்தைக் கைவிடுவது நேரத்தை மிச்சப்படுத்தும்.

இவ்வாறான தவறுகளை 2024இல் விடாமல் இருப்பதன் ஊடாக, அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்கலாம் மக்களுக்கும் ஞாபமூட்டலாம் என்பதே எமது அவதானிப்பு.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் மனவலிமையையும் அன்பின் ஆழத்தையும் அவரின் மன்னித்தல் பண்பின் ஊடாகப் புரிந்துகொள்ள முடியும். மன்னித்தல் ஒருவரின் வியாபகமான நெஞ்சத்தின் இயல்பைக் காட்டி நிற்கும். மக்கள் இவர்களோடு இணைவார்கள்.

நண்பர்கள் மத்தியில், சின்னத்தவறுகள் நேர்ந்தாலும் பிரிந்துவிடும் சூழ்நிலைகள் வருவதுண்டு. இந்நிலையில் ஒருவர் செய்த துரோகத்தை, அவரால் பாதிக்கப்பட்டவர் மன்னிப்பது பெரிய விடயம்.

கோபம், குரோதம் போன்றவற்றை எவரும் நிலையாக மனதில் வைத்திருத்தலாகாது. தவறுகளை அடிக்கடி செய்பவர்கள், தாங்கொணா இம்சைகள் செய்பவர்கள் போன்றவர்களைக்கூட பெருந்தன்மையுடன் மன்னித்துவிடும் நபர்கள், பயத்தால் அல்ல; தங்களின் பலத்தைக் காட்டாமல் மன்னிப்பது, அவர்களது சகிப்புத் தன்மையுடன் கூடிய மேலான பண்பாகும்.

இன்று மக்களிடையே குரோதம், வன்மம் எல்லாம் பொறாமையால் மேலெழுகின்றன. தங்களைவிட எவரும் உயர்நிலைக்கு வரக்கூடாது எனும் எண்ணத்துடன் இயங்குபவர்கள் ஏராளம்.

எளியவர்களை வதைத்தலாகாது. மேன்மையான உள்ளம் கொண்டவர்கள், யாவரையும் அரவணைப்பார்கள். இணைந்து வாழத் தெரியாதவர்கள் தனிமைப்படுவார்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# நேரத்தை சமாளிக்க எதையாவது செய்யும் அரசாங்கம்



எம்.எஸ்.எம். ஐயூப்

* பண்டோரா பேப்பர்ஸ் விசாரணை அறிக்கை எங்கே?
* மனித உரிமை தொடர்பான நவாஸ் கமிட்டி அறிக்கை எங்கே?
* சனல் 4 வீடியோவைப் பற்றிய விசாரணையின் முடிவு என்ன?

சர்வதேச கிரிக்கெட் பேரவையில் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் (கிரிக்கெட் சபையின்) அங்கத்துவத்தை அப்பேரவை கடந்த 10ஆம் திகதி இடைநிறுத்தியிருக்கிறது. இலங்கையில் கிரிக்கெட் நிர்வாகத்தில் அரசியல் தலையீடு இருப்பதாக குற்றஞ்சாட்டியே அப்பேரவை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இம்முறை கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிகளின்போது இலங்கை அணி தொடர்ச்சியாக தோல்வியைச் சந்தித்த நிலையில், விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க கடந்த வாரம் ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபைக்குப் பதிலாக கிரிக்கெட் நிர்வாகத்துக்காக இடைக்கால குழுவொன்றை நியமித்தார். அதனை எதிர்த்து ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் தலைவர் ஷம்மி சில்வா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவொன்றை அடுத்து நீதிமன்றம் அக்குழுவுக்கு 14 நாள் இடைக்காலத் தடையை விதித்தது. ஜனாதிபதியும் இடைக்கால குழுவை எதிர்த்து கருத்து தெரிவித்து இருந்தார்.

இப்போது சர்வதேச கிரிக்கெட் பேரவை ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுக்கு விதித்திருக்கும் தடையை அடுத்து இலங்கை அதிகாரிகள் என்ன செய்யப் போகிறார்கள்? அரசியல் தலையீடு என்று சர்வதேச கிரிக்கெட் பேரவை எதைக் குறிப்பிடுகிறது? அமைச்சரின் இடைக்கால குழுவையா? அல்லது அமைச்சர் இடைக்கால குழுவை நியமித்ததை அடுத்து கிரிக்கெட் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க அமைச்சரவை வெளிநாட்டமைச்சர் அலி சப்ரியின் தலைமையில் அமைச்சர்கள் குழுவொன்றையும் நியமித்துள்ளதே அதையா?

அமைச்சர் ரணசிங்க தமது இடைக்கால குழு மீதான இடைக்காலத் தடையை நீக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறார். நீதிமன்றம் அதனை ஏற்காது தடையை நீடித்தால் அமைச்சர் தமது குழுவைக் கைவிட்டு விடுவாரா? அரசாங்கம் மேற்படி அமைச்சர்கள் குழுவை வாபஸ் பெறப் போகிறதா? அரசாங்கம் அண்மைக்காலமாக அவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாலேயே அக்கேள்விகளை எழுப்ப வேண்டியிருக்கிறது.

உதாரணமாக, இராஜாங்க அமைச்சர் ஒருவரும் அவரது கணவரும் வெளிநாடுகளில் இரகசிய வங்கிக் கணக்குகளில் பெரும் தொகை பணத்தைப் பதுக்கி வைத்திருப்பதாகவும் வெளிநாடுகளில் சொத்துக்களைத் திரட்டி வைத்திருப்பதாகவும் பண்டோரா பேப்பர்ஸ் என்றழைக்கப்படும் ஆவணங்களைச் சுட்டிக் காட்டி புலனாய்வு ஊடகவியலாளர்களின் சர்வதேச அமைப்பு தெரிவித்த கருத்தைப் பற்றி மேற்கொள்ளப்பட விசாரணைக்கு என்ன நடந்தது?

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார மாற்றம் நிதி நெருக்கடிக்கு ஏதுவான காரணங்களையும் அதற்கு பொறுப்பானவர்களையும் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணைகளுக்கு என்ன நடந்தது?

2021 உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல் தொடர்பாகப் பிரிட்டனின் செனல் 4 தொலைக்காட்சி அண்மையில் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்களைப் பற்றி விசாரணை செய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு எங்கே? அதன் விசாரணைக்கு என்ன நடந்தது?

உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதலின் பின்னால் மாபெரும் சதியொன்று இருந்திருக்கிறது என்று முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா கூறிய கருத்தைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப் பாராளுமன்ற தெரிவுக் குழுலொன்றை நியமிப்பதாக ஜனாதிபதி கூறினார். அக்குழு எங்கே?

புலனாய்வு ஊடகவியலாளர்களின் சர்வதேச அமைப்பு 2021இல் பல்வேறு நிறுவனங்களிலிருந்து கசிந்த 'பண்டோரா பேப்பர்ஸ்' எனப்படும் ஒரு கோடியே 19 இலட்சம் இரகசிய ஆவணங்களைப் பரிசீலனை செய்தே முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவும் அவரது கணவர் திருகுமார் நடேசனும் ஒரு கோடியே என்பது இலட்சம் டொலர் பணத்தை உலகில் வரி ஏய்ப்பாளர்கள் பணம் பதுக்கும் இடங்களில் வைத்திருப்பதாகக் கூறியிருந்தது. இது நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தவே அந்த விடயத்தைப் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய இலஞ்சம் ஆணைக்குழுவுக்கு 2021 ஒக்டோபர் 6ஆம் திகதி பணிப்புரை விடுத்தார். ஒரு மாதத்துக்குள் தமக்கு அறிக்கை வேண்டும் என்றே ஜனாதிபதி கோட்டாபய அக்குழுவுக்குக் கட்டளை பிறப்பித்தார். ஆயினும் இரண்டு வருடங்கள் கழிந்தும் இலஞ்ச ஆணைக்குழு இன்னமும் அது தொடர்பாக ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை.

அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் விடயத்தில் ஐ.நா மனித உரிமை பேரவை மேற்கொண்டுவரும் நெருக்குதலின் மத்தியில் எதையாவது செய்ய வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட கோட்டாபய 2021 ஜனவரி மாதம் உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி நவாஸ் தலைமையில் மூவர் கொண்ட ஆணைக்குழுவொன்றை நியமித்தார். மனித உரிமை விடயத்தில் இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட சகல ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களின் அறிக்கைகளைப் பரிசீலனை செய்து அவ்விடயத்தில் என்ன செய்யலாம் என்று பரிந்துரை செய்வதே நவாஸ் குழுவின் கடமையாகக் குறிப்பிடப்பட்டது.

இப்பணிக்காக அவ்வாணைக்குழுவுக்கு ஆறு மாத கால தவணை வழங்கப்பட்ட போதிலும், அக்காலக்கெடு பலமுறை நீடிக்கப்பட்டு இறுதியில் இவ்வருடம் பெப்ரவரி 6ஆம் திகதி அவ்வாணைக்குழு தமது பரிந்துரைகளின் சாராம்சம் ஒன்றை ஜனாதிபதி ரணிலிடம் கையளித்தது. அவ்வளவு தான், ஒன்பது மாதமாகியும் ஜனாதிபதி அப்பரிந்துரைகள் விடயத்தில் எதையும் செய்தாக தெரியவில்லை. அதுவும் அந்த நேரத்துக்கு மனித உரிமை பேரவையை ஏமாற்றக் கோட்டா மேற்கொண்ட நடவடிக்கையாகவே கருத வேண்டியுள்ளது.

பொருளாதார நெருக்கடி நாட்டின் சகலரினதும் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியையே குறை கூறுகிறார்கள்.

அதே பொதுஜன முன்னணி அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்கு ஏதுவான காரணங்களையும் அதற்குப் பொறுப்பானவர்களையும் கண்டறிய கடந்த ஜூலை மாதம் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமித்தது. இன்று வரை அத்தெரிவுக்குழு ஒரு நாள் மட்டுமே கூடியதாகத் தெரிய வருகிறது. அதுவும் குற்றச்சாட்டுக்களைத் திசை திருப்ப எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவே கருத முடியும்.

செனல் 4 விவகாரம் தொடர்பான விசாரணையும் அரசாங்கம் ஆரம்பித்து கைவிட்டு இருக்கும் மற்றொரு விடயமாகவே தெரிகிறது. கோட்டாபய 2019இல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக நாட்டில் பாதுகாப்பற்ற நிலைமையை உருவாக்கும் நோக்குடன் அரச புலனாய்வு சேவையின் பிரதானி சரேஷ் சலேயின் திட்டப்படியே உயிர்த்த ஞாயிறுத் தினப் பயங்கரவாத தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதே செனல் 4 தமது விவரணப் பட நிகழ்ச்சி மூலம் கூறுகிறது.

இந்த குற்றச்சாட்டை பற்றி விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி ரணில் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ. இமாமின் தலைமையில் மூவர் கொண்ட குழுவொன்றை நியமித்தார். ஒக்டோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் விசாரணையின் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் அவர் அக்குழுவைப் பணித்தார். ஆனால், இன்று வரை அறிக்கையைப் பற்றி எதனையும் ஜனாதிபதி செயலகம் தெரிவிக்கவில்லை.

செனல் 4 நிகழ்ச்சி வெளியிடப்பட்ட உடனேயே அதனை மறுத்த பாதுகாப்பு அமைச்சு உள்நாட்டு வெளிநாட்டு விசாரணைகள் மூலம் தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவர் சஹ்ரான் ஹாஷிமே உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதலின் சூத்திரதாரி என்பது நிருபிக்கப்பட்டுவிட்டுள்ளது என்று அறிக்கையொன்றின் மூலம் கூறியது. அந்த நிலையில் தான் ஜனாதிபதி செனல் 4 குற்றச்சாட்டை விசாரிக்கக் குழுவொன்றை நியமித்தார். கடந்த மாதம் 2ஆம் திகதி ஜனாதிபதி,ஜேர்மன் தலைநகர் பேரலினில் ஜேர்மன் தொலைக்காட்சியான டௌஷ் வெலாவுடன் நடத்திய நேர்காணலின் போதும் பாதுகாப்பு அமைச்சின் நிலைப்பாட்டையே எடுத்துரைத்தார். சர்வதேச விசாரணைக்குழுக்கள் இந்த விடயம் தொடர்பாக அறிக்கை வெளியிட்டு இருக்கும்போது, மேலும் இதைப் பற்றி ஏன் கேள்வி எழுப்ப வேண்டும் என்று அவர் மிகவும் கோபமாக அந்த நேர்காணலின் போது கேட்டார். எனவே விசாரணைக் குழு அமைத்தாலும் விசாரணை செய்யும் நோக்கம் ஜனாதிபதியிடம் இருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

அரசாங்கம் எந்தவொரு பாரதூரமான விடயத்தையும் பாரதூரமானதாகப் பார்க்காமல் அந்தந்த நேரத்தைச் சமாளிப்பதற்காக எதையாவது செய்கிறது என்பதே இவற்றின் மூலம் தெளிவாகிறது.

## கடிதங்கள்

### பணியை துரிதப்படுத்தவும்


தீபாவளி பண்டிகை, ஞாயிற்றுக்கிழமை (13) நிறைவடைந்தது. இந்நிலையில், தீபாவளியை முன்னிட்டு ஹட்டன் நகரில் எங்குப் பார்த்தாலும் தற்காலிக வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டு வர்த்தகம் இடம்பெற்றது. இவ்வாறான காலகட்டத்தில் நகரில் பல்வேறு இடங்களில் உக்கும், உக்கா மற்றும் பிலாஸ்டிக் குப்பைகள் குவிந்துள்ளது.

இதனால் நகருக்கு வரும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் நிலையில் உள்ளது.

அது மட்டும் அல்லாமல் ஹட்டன் நகரில் உள்ள ஏனைய குடியிருப்பு பகுதியில் உள்ள வீதிகளிலும் இவ்வாறான குப்பைகளைக் காணக்கூடியதாக உள்ளது.

ஹட்டன் நகர சபை அகற்றிய போதும் அதிகளவில் ஊழியர்கள் இணைக்கவில்லை. ஆதலால் நகர், நகரில் உள்ள ஏனைய குடியிருப்பு பகுதி சுத்தம் செய்யும் பணியைத் துரிதப்படுத்த வேண்டும் என நகர் வர்த்தகர்கள் மற்றும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– செ.தி.பெருமாள்



## பாராட்டு




அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாளம்பைக்கேணி – நூராணியா ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகத்தின் கீழ் உள்ள பிரதேசத்தில் மௌலவி பட்டத்தை பூர்த்தி செய்து வெளியேறியவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நூறானியா பெரிய ஜும்மா பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவர் ஏ.சி அன்வர் தலைமையில் திங்கட்கிழமை (13) பள்ளிவாசலில் நடைபெற்றது.

– ஏ.எல்.எம்.ஷினாஸ்







## வருடாந்த பட்டமளிப்பு விழா






இலங்கையில் முன்னணி தனியார் சர்வதேச கல்வி நிறுவனமாக திகழும் ஐ.டி.எம்.என்.சி சர்வதேச கல்வி நிறுவனத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சனிக்கிழமை (11) நிறுவனத்தின் தவிசாளர் கலாநிதி. ஜனகன் விநாயகமூர்த்தி தலைமையில் நடைப்பெற்றது.

இப்பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கலாநிதி, முதுகலை, இளங்கலை, உயர் டிப்ளோமா ஆகிய பட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

இவ்விழாவுக்கு, பிரதம அதிதியாக நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, கௌரவ அதிதிகளாக அமைச்சர் டிரான் அலஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி சுரேன் ராகவன், அனுராதா ஜெயரட்ண ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் ஐ.டி.எம்.என்.சி சர்வதேச கல்வி நிறுவனத்தின் பிரித்தானிய பல்கலைக்கழகமான Buckinghamshire NewUniversity இன் முக்கிய பிரதிநிதிகளாகிய கலாதிதி சேரா வில்லியம், மைக் மைக்மைக்டோமற் மற்றும் அலன் கிளார்க், தூதுவரும் வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளருமான அமீர் அஜ்வாத் ஆகியோர் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி வைத்தனர்.





## நியமனம்






ஐக்கிய நாடுகள் சமாதானத் தூதுவர் பேரவையின் அங்கத்தவராக இலங்கை தேசிய ஐக்கியத்திற்கான சர்வமத கூட்டமைப்பின் முஸ்லிம் விவகார சம–தலைவர், அஷ்–ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்–காதிரி நியமிக்கப்பட்டார். ஐக்கிய நாடுகள் சமாதானத் தூதுவர் பேரவையினால் (UNPAF) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு வெள்ளிக்கிழமை (03) நடைபெற்றது.

– எம்.எஸ்.எம்.ஸாகிர்

## கதிரைகள் அன்பளிப்பு



கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரியின் அதிபர் எம்.மன்சூர் அலியின் வேண்டுகோளுக்கு அமைவாக, ராபிதா நளீமிய்யீன் பழைய மாணவர் அமைப்பு, திருகோணமலை மாவட்ட பிராந்திய கிளை ஏற்பாட்டில் சஹாரா பவுண்டேஷன் (Zahara Foundation) அனுசரனையுடன் தி/கிண்/முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரியின் பிரதான கேட்போர்கூடத்தின் பாவனைக்கு ஒரு தொகை கதிரைகள் அன்பளிப்புச் செய்துள்ளது.

– ஹஸ்பர்






## பசுமைத் திட்ட முயற்சிகள்...



இயற்கையை நேசித்து சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜய ஸ்ரீ எண்ணத்தில், அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மரநடுகை வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய அம்பாறை பிரதிப் பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜய ஸ்ரீ வழிநடத்தலில் முப்படைகள் மற்றும் சமூக செயற்பாட்டு அமைப்புக்களின் பங்களிப்புடன் அம்பாறை நகரை பசுமை நகரமாக மாற்றும் நோக்கில் இரண்டாம் கட்ட பசுமை திட்ட நிகழ்வு கடந்த மாதம் ஆரம்பமானது. அதன் தொடர்ச்சியாக செவ்வாய்க்கிழமை (14) 5,500 செடிகள் நடும் திட்டத்தில் அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மறுசுழற்சி நிலையத்திற்கு அருகாமையில் 3,200 செடிகள் நடப்பட்டன.

– பாறுக் ஷிஹான்









## கண்காட்சி





ஆயுர்வேத சிகிச்சை மற்றும் ஆயுர்வேத மருந்து வகைகள் தொடர்பான கண்காட்சி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், கால்நடை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.பி ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு துறையைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டார்.




காசா

# காசா பாராளுமன்றத்தை தன்வசமாக்கிய இஸ்ரேல்

இஸ்ரேல் நாட்டில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாகப் போர் தொடர்ந்து வரும் நிலையில், இப்போது காசாவில் இஸ்ரேல் கை ஓங்க ஆரம்பித்துள்ளது. இதனால் போர் சீக்கிரம் அடுத்த கட்டத்திற்குச் செல்லும் என்று அஞ்சப்படுகிறது.

இந் நிலையில் இஸ்ரேல் இராணுவம் காசா பாராளுமன்றத்தைக் கைப்பற்றியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.



இது தொடர்பான புகைப்படம் ஒன்றும் இணையத்தில் வைரலாகி வருகிறது.

அதில், காசாவில் உள்ள பாராளுமன்ற கட்டிடத்தின் உள்ள இஸேஸ்ரல் கொடியுடன் இஸ்ரேல் வீரர்கள் இருப்பது போன்ற படங்கள் வெளியாகியுள்ளது.

## உலகின் மிகவும் ஏழ்மையான நாடு

ஒவ்வொரு நாட்டிற்கும் வறுமை ஒரு பெரிய பிரச்சினையாகும், மேலும் உலகின் பல நாடுகள் அதனுடன் போராடி வருகின்றன. அந்த வரிசையில் உலகின் மிக ஏழ்மையான நாடாக புருண்டி என்ற நாடு கண்டறியப்பட்டுள்ளது. புருண்டி கிழக்கு ஆபிரிக்காவில் உள்ளது.

இந்நாட்டின் மக்கள் தொகை சுமார் 12 மில்லியன் அதாவது 1 கோடியே 20 இலட்சம். இதில் 85 சதவீத மக்கள் மிக கடுமையான வறுமையில் வாடுகின்றனர்.

இந்நாட்டு மக்களின் ஆண்டு வருமானம் ஆண்டுக்கு 180 டொலர்கள், அதாவது ஆண்டுக்கு 14 ஆயிரம் ரூபாய் தான். இங்கு 3 பேரில் ஒருவர் வேலையில்லாமல், நாள் முழுவதும் உழைத்தாலும், தினமும் 50 ரூபாய் கூட சம்பாதிக்க முடியாத நிலை உள்ளது.

இங்கிலாந்து

## இந்த நாணயத்தால் வாழ்நாள் இலவசம்



தொடக்க காலத்தில் ரோயல் தியேட்டர் என அழைக்கப்பட்ட பிரிஸ்டல் ஓல்ட் விக் திரையரங்கம், 1764 மற்றும் 1766 காலத்தில் கட்டப்பட்டது. திரையரங்கின் உண்மையான பங்குதாரர்களுக்கு வழங்குவதற்காக 1766ஆம் ஆண்டு 50 வெள்ளி நாணயங்கள் அச்சிடப்பட்டன.

இந்த 50 பங்குதாரர்களும் திரையரங்கம் கட்டுவதற்காக தனித்தனியாக 18ஆம் நூற்றாண்டில் மிகப்பெரிய தொகையை வழங்கியுள்ளனர். திரையரங்கின் கட்டுமானத்திற்கு உதவியதற்காக இவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளி நாணயம் வழங்கப்பட்டது. இதை வைத்து இந்த திரையரங்கில் நிகழ்த்தப்படும் எந்த நிகழ்ச்சியையும் அவர்கள் இலவசமாக பார்த்துக் கொள்ளலாம். இந்நிலையில் பிரிஸ்டல் ஓல்ட் விக், தங்களது நூற்றாண்டு கால கொள்கைக்கு மரியாதை அளிக்கும் விதமாக சமீபத்தில் ஒரு முடிவை எடுத்துள்ளது

அதன்படி, மதிப்புமிக்க இந்த 50 வெள்ளி நாணயங்கள் தற்போது ஏலம் விடப்படவுள்ளது. எப்படியும் ஒவ்வொரு நாணயமும் மிகப்பெரிய தொகைக்கு ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா

## "காசா மருத்துவமனை பாதுகாக்கப்பட வேண்டும்"

காசாவில் உள்ள மிகப்பெரிய மருத்துவமனையான அல்-ஷிபாவில் காயம் அடைந்தோர், குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கானோர் சிகிச்சை பெற்றும் ஆயிரக்கணக்கானோர் தஞ்சம் அடைந்துள்ள நிலையில், இந்த மருத்துவமனை



இஸ்ரேல் இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் மறைந்து கொண்டு ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தி வருவதாக இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது. இஸ்ரேலின் குற்றச்சாட்டை காசா மறுத்துள்ளது. மேலும் மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தப்பட்டால் ஆயிரக்கணக்கான மக்களின் நிலை என்னவாகும்? என்று அஞ்சப்படுகிறது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் "மருத்துவமனையை பொறுத்தவரை குறைவான ஊடுருவல் நடவடிக்கை இருக்கும் என்பது என்னுடைய நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பு" எனக் கூறியுள்ளார்.

மணிப்பூர்

## மைத்தேயிக்கு தடை

மணிப்பூரில் பெரும்பான்மையாக வசிக்கும் மைத்தேயி சமூகத்தினருக்கும் குகி பழங்குடியினருக்கும் இடையே கடந்த மே மாதம் மோதல் ஏற்பட்டு, இனக் கலவரமாக மாறியது. இதில் 178 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், பிரிவினைவாத மற்றும் வன்முறை செயல்பாடுகள் காரணமாக பல்வேறு மைத்தேயி தீவிரவாத அமைப்புகளை சட்டவிரோத அமைப்புகளாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்தது.

இந்த அமைப்புகள், மணிப்பூரில் பாதுகாப்புப் படையினர், பொலிஸார் மற்றும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவது மற்றும் கொலை செய்வது இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக மத்திய அரசு கருதுகிறது.

மேலும், மக்கள் விடுதலைப் படை (பிஎல்ஏ) மற்றும் அதன் அரசியல் பிரிவான புரட்சிகர மக்கள் முன்னணி (ஆர்பிஎப்), ஐக்கிய தேசிய விடுதலை முன்னணி



(யுஎன்எல்எப்) மற்றும் அதன் ஆயுதப் பிரிவான மணிப்பூர் மக்கள்படை (எம்பிஏ), காங்லீபாக் மக்கள் புரட்சிகர கட்சி, அதன் ஆயுதப் பிரிவான சிவப்பு இராணுவம் என்ற காங்லீபாக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட அமைப்புகளை சட்ட விரோத அமைப்புகளாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

## அத்துமீறி பறந்த பாகிஸ்தான் ட்ரோன்கள் பறிமுதல்

இந்திய எல்லைப் பகுதிகளில் அத்து மீறி பறந்த பாகிஸ்தான் ட்ரோன்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, கடந்த 2019 முதல் இதுவரை இந்திய எல்லைப் பகுதிகளில் அத்து மீறி பறந்த 82 பாகிஸ்தான் ட்ரோன்களை சுட்டு வீழ்த்தி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், 593 முறை எல்லைப் பகுதிகளில் ட்ரோன்கள் பறப்பது கண்டறியப்பட்டுள்ளது.

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கும் காலிஸ்தான் பிரிவினைவாதிகளுக்கும் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உளவு அமைப்பு ட்ரோன்கள் வாயிலாக ஆயுதங்கள், போதைப்பொருட்களை விநியோகம் செய்து வருகிறது.

பாகிஸ்தானின் ட்ரோன் அச்சுறுத்தலை எதிர்கொள்ள எல்லை பாதுகாப்புப் படை வீரர்கள் ட்ரோன் தடுப்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வருவதாகவும் பஞ்சாபுக்குள் ட்ரோன்கள் வாயிலாகபோதை பொருட்கள் கடத்தப்படுவதை தடுக்க அந்த மாநில பொலிஸார் சிறப்பு படையை உருவாக்கி உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தெலுங்கானா

## மூதாட்டியை தூக்கி நடனமாடிய அமைச்சர்



தெலுங்கானாவில் அமைச்சராக உள்ள 60 வயதான மல்லா ரெட்டி தனது தொகுதி மக்களின் வீடுகளில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளுக்கு செல்லும்போது, நடனமாடுவது பொது மக்களிடம் இயல்பாக பழகுவது உள்ளிட்ட காரணங்களால் அவர் மீது அந்த தொகுதி மக்கள் மிகுந்த மரியாதை வைத்துள்ளனர்.

இந்நிலையில், அமைச்சர் ரெட்டி தனது தொகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு சென்றுள்ளார். அதில் ஏராளமான மூதாட்டிகள் கலந்து கொண்டுள்ளனர். அப்போது தனது அருகில் இருந்த மூதாட்டியை பார்த்த மல்லா ரெட்டி தனது மடியில் அமருமாறு கூறியுள்ளார். மூதாட்டி வெட்கப்பட்டு அவரது மடியில் உட்கார மறுத்ததையடுத்து மல்லா ரெட்டி மூதாட்டியை தூக்கி கொண்டு நடனம் ஆடியுள்ளார்.

அதனை அருகில் இருந்த பெண்கள் கைகளை தட்டியபடி ஆரவாரம் செய்தனர்.



### இன்று முதலாவது அரையிறுதிப் போட்டி:

# இந்தியா எதிர் நியூசிலாந்து

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், மும்பையில் இன்று 15 பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் நியூசிலாந்தை இந்தியா எதிர்கொள்ளவுள்ளது.

லீக் சுற்றுப் போட்டிகளில் தோல்வியே அடையாமல் ஜாம்பவானாகக் காட்சியளிக்கும் இந்தியாவை நியூசிலாந்து வீழ்த்துவதானது எதிர்பாராத முடிவொன்றாகவே இருக்கும். எனினும் அண்மைய உலகக் கிண்ணத் தொடர்களின் விலகல் போட்டிகளில் நான்கு தடவைகள் இந்தியாவை நியூசிலாந்து வீழ்த்தியுள்ளது.

இப்போட்டியைப் பொறுத்தவரையில் நாணயச் சுழற்சி முக்கியமானதாகக் காணப்படுகின்றது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடும் அணிக்கே வெற்றி வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன. அதற்காக இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடும் அணிக்கு வாய்ப்புகள் இல்லையெனக் கூறி விட முடியாது. இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடும் அணியானது 25 ஓவர்கள் வரைக்கும் இரண்டுக்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை இழக்காதவிடத்து வெற்றியிலக்கை எட்ட வாய்ப்புகளுண்டு. ஏனெனில் மும்பையில் இரண்டாவது இனிங்ஸிலேயே பந்து அதிகம் ஸ்விங் ஆவதுடன், 15 ஓவர்கள் வரையில் நீடிப்பதோடு, ஸீமானது 20 ஓவர்கள் தாண்டியும் இருக்கும் எனக் கருதப்படுகிறது.

அந்தவகையில் இந்திய அணி இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடுமிடத்து இந்திய அணித்தலைவர் றோஹித் ஷர்மா இத்தொடர் முழுவதும் வழங்கிய வேகமான ஆரம்பத்தைத் தவிர்த்து நிதானத்தைக் கடைப்பிடிக்கலாம். ஷர்மாவின் வேகமான ஆரம்பங்களால் அழுத்தமில்லாத கோலியிடமிருந்து சிறப்பான பெறுபேறுகள் கிடைக்கப் பெறுகையில் இவர்கள் இருவருமே நியூசிலாந்தின் இலக்காகக் காணப்படுவர்.

மறுபக்கமாக நியூசிலாந்தின் முக்கியமான வீரராக மிற்செல் சான்ட்னெர் காணப்படுகையில் இவரின் 10 ஓவர்களையும் இந்தியா நிதானமாகக் கடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர நியூசிலாந்தின் பகுதிநேர பந்துவீச்சாளரான றஷின் றவீந்திரவை இந்தியா இலக்கு வைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### தேசிய மட்ட சதுரங்கப் போட்டிக்கு

## தொடர்ந்து தெரிவு



அஸ்ஹர் இப்றாஹீம்



இலங்கை சதுரங்க சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த அம்பாறை மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான சதுரங்கப் போட்டியில் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய மாணவி முபீன் பாத்திமா சபீலுல் லமாஹ், ஒன்பது வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியிலும், கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவி பளீல் பாத்திமா இல்மா 13 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியிலும் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக சம்பியனாகியுள்ளனர்.

கொழும்பில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டிக்கு இவ்விரு மாணவிகளும் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.




### நெஸ்லே நெஸ்டமோல்ட் மரதனோட்டம்:

## ரங்கதாரி குமாரசிங்க வென்றார்

நெஸ்லே நெஸ்டமோல்ட் அகில இலங்கை பாடசாலைகள் மரதனோட்டப் போட்டியில் பெண்களுக்கான 21 கிலோ மீற்றர் அரை மரதனோட்டப் போட்டியில், வெலிமட ஸ்ரீ தேவானந்த மத்திய கல்லூரியைச் சேர்ந்த டபிள்யூ.டி.டி.ரங்கதாரி குமாரசிங்க வென்றார்.

இரண்டாமிடத்தை மொனராகல சேனாபதி மத்திய கல்லூரியைச் சேர்ந்த டி.எம் சாமிலா சிரிவர்தனவும், மூன்றாமிடத்தை ஊவா வெலிமட மத்திய கல்லூரியைச் சேர்ந்த எல்.பி.ஜி பிரபோதா இமஷானியும் பெற்றனர்.

### ஆசிய மாஸ்டர்ஸ் மெய்வல்லுநர் போட்டிகளில்

## ஜெயக்குமாருக்கு வெண்கலப் பதக்கம்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

பிலிப்பைன்ஸில் நடைபெற்று வரும் ஆசிய மாஸ்டர்ஸ் மெய்வல்லுநர் விளையாட்டு விழாவில், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் விளையாட்டு பயிற்றுநரான மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் ப.ஜெயக்குமார், 56- 59 வயதுப் பிரிவில் கோலூன்றிப் பாய்தலில் 2.30 மீற்றர் உயரத்தை தாண்டி வெண்கலப் பதக்கத்தை வெற்றி கொண்டுள்ளார்.

ஜெயக்குமா, இவ்விளையாட்டு விழாவில் 100 மீற்றர் ஓட்டம் மற்றும் நீளம் பாய்தல் போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தனது இளமைக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகச் சிறந்த ஒரு தடகள சம்பியனாக ஜெயக்குமார் பிரகாசித்திருந்தார்.

## கொடி கம்பங்கள் கையளிப்பு



எம்.யூ.எம். சனூன்

புத்தளம் லெஜென்ட்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இராப்போசனத்துடன் கூடிய விஷேட கலந்துரையாடல் ஒன்று, புத்தளம் ரையான் மஹாலில் அண்மையில் இடம்பெற்றது.

லெஜன்ட்ஸ் கழகத்தின் முகாமையாளர் முஹம்மது யமீன், 47,000 ரூபாய் பெறுமதியான கால்பந்தாட்ட கோல் கம்பத்துக்கான வலை மற்றும் தொடர் கொடி கம்பங்களை இதன்போது புத்தளம் லீக்கிடம் கையளித்தார்.

அதேநேரம் புத்தளம் விம்பிள்டன் கழகத்தின் முன்னை நாள் வீரரான மர்ஹூம் ஜனாப்பின் நினைவாக நடாத்தப்படவுள்ள அணிக்கு 9 பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடருக்கான பூரண அனுசரணையை லெஜன்ட்ஸ் கழகம் பொறுப்பேற்றுள்ளதோடு இதற்கான மொத்த பரிசுத் தொகையான 80,000 ரூபாய் பெறுமதியான காசோலையும் புத்தளம் லீக்கிடம் கையளிக்கப்பட்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 15 நவம்பர் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.